

# உறுதிபூசுதல் திருச்சடங்கு

திருவழிபாட்டு நடுவகம்

யாழ்ப்பாணம்

05. 11. 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உறுதிபூசுதல் திருச்சடங்கு

1. ஆயரை வரவேற்றல்.

2. உறுதிபூதல் பெறுபவர்கள் கையில் நற்செய்தி ஏந்தி ஆலயத்திற்குப் பவனியாகச் செல்வார்கள். அப்போது வருகைப் பாடல் பாடப்படும்.

3. தொடக்கச்சடங்கு:

ஆயர்: பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே.

எல்.: ஆமென்.

ஆயர்: நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் அருளும், கடவுளின், அன்பும், தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

எல்.: உம்மோடும் இருப்பதாக.

4. திருப்பலி முன்னுரை

5. சூழ்நிலைக்கு ஏற்றவாறு, உறுதிபூசுதலில் பெறுவோரின் பெயர்கள் வாசிக்கப்படும். அப்போது உறுதிபூசுதல் பெறுபவர்கள் "இதோ இருக்கின்றேன்" என்று பதிலுரைப்பர்.

6. ஆயர் உறுதிபூசுதல் பெறுபவரை வினவுதல்

ஆயர்: பிள்ளைகளே, இன்று நீங்கள் திருச்சபையிடம் கேட்பது என்ன?

பிள்.: உறுதிபூசதல் என்னும் திருவருட்சாதனத்தைப் பெற விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்: உறுதிபூசுதல் வழியாக நீங்கள் பெறுவது என்ன?

பிள்.: பரிசுத்த ஆவியையும் அவரின் கொடைகளையும் பெற்றுக், கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ முடியும் என்பதை விசுவசிக் கின்றோம்.

ஆயர்: அன்பார்ந்த இறைமக்களே! தேற்றுபவரான பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக நாம் அனைவரும் ஒன்றுகூடி இவ்வேளையில் மன்றாடுவோம். உறுதிபூசுதல் என்னும் அருட்சாதனம் வழியாக நீங்கள் பரிசுத்த ஆவியையும், அவரின் கொடைகளையும் பெற்று, உங்கள் வாழ்வில் என்றுமே கிறிஸ்துவின் சாட்சிகளாகத் திகழ இறைவன் உங்களுக்குத் துணை புரிவாராக.

எல்.: இறைவா உமக்கு நன்றி.

7. **மன்னிப்பு வழிபாடு**

8. **உன்னதங்களிலே**

9. **சபை மன்றாட்டு**

செபிப்போமாக, எல்லாம் வல்ல இரக்கமுள்ள இறைவா, உம்முடைய பரிசுத்த ஆவி எங்கள் உள்ளத்தில் குடிகொண்டு எங்களைத் தம் மாட்சியின் ஆலயமாக்க அவர் எங்கள் மீது எழுந்தருளச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசுக்கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல்.: ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. இறைவாக்கு வழிபாடு

(அ) முதல் வாசகம்: திப 2: 14 – 22

(ஆ) திபா 104

பல்லவி: ஆண்டவரே உமது ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

என்னுயிரே ஆண்டவரைப் போற்றிடு! என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்துணை மேன்மைமிக்கவர்! ஆண்டவரே உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புக்களால் நிறைந்துள்ளது. (பல்லவி)

தக்க காலத்தில் நீர் உணவளிப்பீர் என்று இவையெல்லாம் உம்மையே நம்பியருக்கின்றன. நீர் கொடுக்க, அவை சேகரித்துக் கொள்கின்றன; நீர் உம் கையைத் திறக்க, அவை நிறைவுறுகின்றன.(பல்லவி)

உமது ஆவியை நீர் அனுப்ப, அவைபடைக்கப் பெறுகின்றன; மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர். ஆண்டவரின் மாட்சி என்றென்றும் நிலைத்திருப்பதாக! அவர் தம் செயல்களைக் குறித்து மகிழ்வாராக! (பல்லவி)

நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்; என்னுயிர் உள்ளவரையிலும் என் கடவுளுக்குப் புகழ் சாற்றிடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தியானப் பாடல் அவருக்கு உகந்ததாய் இருப்பதாக! நான் ஆண்டவரில் மகிழ்ச்சி கொள்வேன். (பல்லவி)

(இ) நற்செய்தி: லூக் 4: 16- 22

11. **ஆயரின் மறையுரை**

12. **திருமுழுக்கு வாக்குறுதியைப் புதுப்பித்தல்**

உறுதிபூசுதல் பெறுபவர்கள் தம் வலது கரங்களை உயர்த்தியவாறு எழுந்து நின்று, இடது கரங்களில் எரியும் மெழுகுதிரிகளைத் தாங்கியவாறு நிற்க ஆயர் அவர்களை வினவுகின்றார்.

ஆயர்: பசாசையும், அதன் செயல்களையும், அதன் மாயக் கவர்ச்சிகளையும் விட்டுவிடுகின்றீர்களா?

எல்.: விட்டுவிடுகிறேன்

ஆயர்: வானமும் வையமும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனை விசுவசிக்கின்றீர்களா?

எல்.: விசுவசிக்கின்றேன்.

ஆயர்: அவருடைய ஒரே மகனும் கன்னிமரியிடமிருந்து பிறந்து, பாடுபட்டு, அடக்கம் செய்யப்பட்டு, இறந்தோரில் நின்று உயிர்த்தெழுந்து தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பவருமான நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவை விசுவசிக்கின்றீர்களா?

எல்.: விசுவசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்: அன்று பெந்தக்கோஸ்து விழாவின் போது திருத்தூதருக்கு அருளப்பட்டது போல் இன்று உங்களுக்குச் சிறப்பாக அருளப்படவிருக்கின்ற ஆண்டவரும் உயிரளிப்பவருமான பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றீர்களா?

எல்.: விசுவசிக்கின்றேன்.

ஆயர்: பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையையும், புனிதர்களின்சமூக உறவையும் பாவப் பொறுத்தலையும் உடலின் உயிர்ப்பையும் நித்திய வாழ்வையும் விசுவசிக்கின்றீர்களா?

எல்.: விசுவசிக்கின்றேன்.

ஆயர்: இதுவே நம் விசுவாசம். இதுவே திருச்சபையின் விசுவாசம். இதை ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவில் அறிக்கையிடுவதிலே நாம் பெருமை கொள்கிறோம்.

எல்.: ஆமென்.

## 13. கைகளைத் தலைமேல் வைத்தல்

ஆயர் (துணைக் குருக்கள் அருகில் நிற்க) எழுந்து நின்று மக்கள் பக்கம் திரும்பி, கைகூப்பிச் சொல்லுவதாவது.

அன்பான மக்களே எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனை வேண்டுவோமாக:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானஸ்நானத்தில் நித்திய வாழ்வுக்கென ஏற்கனவே புதுப்பிறப்படைந்து, இறைவனின் சுவிகார மக்களாக்கப்பெற்ற இவர்கள் மீது அவர் தயவுடன் பரிசுத்த ஆவியைப் பொழிவாராக. அந்த ஆவியானவர் தம் கொடைகளை நிறைவாக அளித்து, இவர்களை உறுதிப்படுத்தி, தம் அபிஷேகத்தால் இவர்கள் இறைமகன் கிறிஸ்துவின் சாயலைப் பெற்றுக்கொள்ளச் செய்வாராக. (எல்லோரும் சற்று நேரம் மௌனமாகச் செபிக்கின்றார்கள்)

ஆயர் (துணைக் குருக்களோடு) உறுதிபூசுதல் பெறுவோர் மேல் கைகளை நீட்டி, ஆயர் மட்டும் செபிக்கின்றார்:

எல்லாம் வல்ல இறைவா/ எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் தந்தையே/ நீரினாலும், பரிசுத்த ஆவியாலும் உம் அடியார்கள் இவர்களைப் பாவத்தினின்று விடுவித்து/ புதுப்பிறப்பளித்துள்ள ஆண்டவரே/ துணையாளராகிய பரிசுத்த ஆவியை இவர்களுக்குள் அனுப்பி அருளும்/ ஞானமும் மெய்யுணர்வும் தரும் ஆவியை/ அறிவும் பக்தியும் தரும் ஆவியை இவர்களுக்கு அளித்தருளும்/ தெய்வ பயத்தின் ஆவியால் இவர்களை நிரப்பியருளும்/ எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் - ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. திருத்தைலம் பூசுதல்

ஆயர் தமது வலது பெருவிரல் நுனியை திருத்தைலத்தில் தோய்த்து, உறுதிபூசுதல் பெறுபவரின் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந்து சொல்லுவதாவது

**(பெயர் ...) பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள்: பரம தந்தையின் உன்னத கொடை அவரே.**

உறுதி பூசுதல் பெறுபவர் : ஆமென்

ஆயர் - உமக்குச் சமாதானம் உண்டாவதாக.

உ.பெ - உமக்கும் சமாதானம் உண்டாவதாக.

## 15. விசுவாசிகளின் மன்றாட்டு

ஆயர்: அன்பார்ந்த சகோதரர்களே, எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனைத் தாழ்மையுடன் வேண்டுவோம். அவருடைய பரிசுத்த ஆவியிடமிருந்து நமக்கு ஒரே விசுவாசம், ஒரே நம்பிக்கை, ஒரே பரம அன்பு அருளப்படுவது போல, நாமும் ஒரு மனப்பட்டு மன்றாடுவோமாக.

பணி: பரிசுத்த ஆவியின் அருட்கொடையால் உறுதியடைந்துள்ள இவர்களுக்காக வேண்டுவோமாக. இவர்கள் விசுவாசத்தில் வேரூன்றி, பரம அன்பில் நிலைத்து நின்று, தங்கள் வாழ்க்கையால் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக விளங்க வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்.: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி.: இவர்களுடைய பெற்றோர், ஞானத்தாய் தந்தையருக்காக வேண்டுவோமாக: இவர்களுடைய விசுவாசத்தைப் பேணிக் காக்கும் பொறுப்பேற்றவர்கள் தங்கள் சொல்லாலும் முன்மாதிரியாலும் இவர்கள் கிறிஸ்துவின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடக்க எப்போதும் தூண்டிக் கொண்டிருக்க வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்.: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

பணி.: இறைவனின் புனித திருச்சபைக்காகவும், நம் திருத்தந்தை (பெயர்...) நம் ஆயர் (பெயர்....) ஆண்டகைக்காகவும், அனைத்துலக ஆயர்களுக்காகவும் வேண்டுவோமாக. பரிசுத்த ஆவியினால் ஒன்று சேர்க்கப்பட்ட இத் திருச்சபை, ஆண்டவர் வரும் நாள் வரை, விசுவாசத்தின் ஒருமைப் பாட்டிலும், பரம அன்பின் ஒன்றிப்பிலும் நிலைத்து நின்று, எங்கும் பரவி வளர்ச்சி பெறவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்.: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

பணி.: உலகம் அனைத்திற்காகவும் வேண்டுவோமாக: எல்லா மனிதர்களும் ஒரே கடவுளைத் தம் தந்தையாகவும், தம்மைப் படைத்தவராகவும் கொண்டிருப்பதனால், இனம், நாடு என்னும் பாகுபாடின்றி, அனைவரையும் சகோதரர்களாகப் பாவித்து பரிசுத்த ஆவி அருள்கின்ற மகிழ்ச்சியிலும் சமாதானத்திலும் அடங்கியுள்ள இறைவனின் அரசை, உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தோடு நாடவும் வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல் ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆயர்: இறைவா, உம் திருத்தூதர்களுக்குப் பரிசுத்த ஆவியை அளித்து, அவர்கள் வழியாகவும், அவர்கள் வழிவரும் ஆயர்களின் வழியாகவும் அதே ஆவியானவர் அளிக்கப்பட வேண்டுமென்று திருவுளமானீர். எங்கள் செபத்தைக் கனிவுடன் கேட்டருளும். உமது நற்செய்தி போதிக்கப்படத் தொடங்கிய காலத்தில் நீர் செய்தருளியதெல்லாம், இக்காலத்திலும் தொடர்ந்து விசுவசிப்போருடைய இதயங்களில் நடைபெற வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்.

**16. காணிக்கைப் பவனி - பாடல்**

**17. காணிக்கை மீது மன்றாட்டு**

ஆண்டவரே, உம் திருமகன் மீட்புப் பணியால் பரிசுத்த ஆவியை எங்களுக்குப் பெற்றுத் தந்தார். அந்த மீட்பின் நினைவாகிய இத் திருப்பலியைக் கொண்டாடும் நாங்கள் புரிகின்ற வேண்டுதலுக்கு, கனிவுடன் செவிசாய்த்தருளும். நாங்கள் கிறிஸ்துவின் சாயலை மென்மேலும் ஏற்கவும், அவருக்குச் சான்று பகர்வதில் என்றும் முன்னேறவும் செய்தருளும், உம்மோடு என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாகவே உம்மை மன்றாடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நற்கருணை மன்றாட்டு

19. நற்கருணை பெற்ற பின்

## உறுதிபூசுதல் பெற்றவர்களின் அர்ப்பணச் செபம்:

**ஆயர்முன் எழுந்து நின்று, தமது வலக்கரங்களை உயர்த்தி அனைவரும் அர்ப்பணச் செபத்தில் பங்கு பெறுவர்**

இன்று உறுதி பூசுதல் என்னும் அருட்சாதனத்தைப் பெற்ற நான்/ இங்கு கூடியிருக்கும் திருச்சமூகத்தின் முன்னிலையிலும்/ ஆயர் முன்னிலையிலும் / அறிக்கையிட்டு வாக்குப் பண்ணுவதாவது:

- திருமுழுக்கு வழியாக நான் பெற்ற புது வாழ்வையும், குறிப்பாக இன்று நான், பெற்ற தேவ ஆவியையும் அதனால் எனக்கு இறைவன் தந்த அழைப்பையும் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

- இறைமகன் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் மீட்கப்பட்ட நான் பாவத்தை என்றும் விலக்கி, புனித வாழ்வில் நிலைத்திருக்க முயலுவேன்.

- இறைவார்த்தை வழியாகவும், அருட்சாதனங்கள் வழியாகவும், சிறப்பாகத் திருப்பலி வழியாகவும் கிறிஸ்தவ வாழ்வில் ஊட்டம் பெற்று உலகிலே நான் கிறிஸ்துவின் சாட்சியாக வாழ்வேன்.

- ஊன் இயல்பின் இச்சைகளுக்கு அடிமையாயிராது, தேவ ஆவியின் ஏவுதலுக்கேற்ப வாழவும், ஆவியின் கனிகளை என் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் முயலுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. நன்றி மன்றாட்டு:

செபிப்போமாக, ஆண்டவரே இவர்களுக்கு உம்முடைய பரிசுத்த ஆவியின் கொடைகளை நிறைவாக அளித்து, உம் ஒரே திருமகனையும் உணவாகத் தந்துள்ளீர்; இவர்கள் உமது திருச்சட்டத்தை நன்கறிந்து, உம்முடைய சுவீகார மக்களுக்குரிய சுதந்திர வாழ்வுக்கு மனிதர் முன் சாட்சிகளாய் விளங்கவும் திருச்சபைக்குரிய போதகப் பணியைத் தங்கள் புனித வாழ்க்கையினால் நிறைவேற்றவும் செய்தருள்வீராக. எங்கள்...

எல்.: ஆமென்.

## 21. ஆயரின் சிறப்பு ஆசியுரை

ஆயர்: எல்லாம் வல்ல பரம தந்தை, நீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் உங்களுக்குப் புதுப்பிறப்பளித்து, உங்களைத் தம் சுவீகார மக்களாக்கிக் கொண்ட இறைவன், உங்களை ஆசீர்வதித்து, தந்தைக்குரிய தம் அன்புக்கு உகந்தவர்களாக உங்களை என்றும் காத்தருள்வாராக.

எல்.: ஆமென்.

ஆயர்: பரம தந்தையின் ஒரே திருமகன், திருச்சபையில் உண்மையில் ஆவியானவர் என்றும் இருப்பாரென வாக்களித்த ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து, உண்மையான விசுவாசத்தை நீங்கள் அறிக்கையிடுமாறு உங்களைத் தம் வல்லமையால் உறுதிப்படுத்துவாராக.

எல்.: ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்: பரிசுத்த ஆவியானவர், சீடர்களின் உள்ளங்களில் அன்புத் தீயை மூட்டியருளிய துணையாளர், உங்களை அசீர்வதித்து, திருக்கூட்டமாய் இங்கு ஒன்றித்திருக்கும் உங்கள் அனைவரையும் இறையரசின் பேரின்பத்திற்கு அழைத்துச் செல்வாராக.

எல்.: ஆமென்.

ஆயர்: எல்லாம் வல்ல இறைவன் பிதா சுதன் பரிசுத்த ஆவி உங்களை ஆசீர் வதிப்பாராக.

எல்.: ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org